**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 23-05-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-05-23 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-05-24 | 2023-05-25 | 2023-05-26 | 2023-05-27 | 2023-05-28 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 0.0 | 4.0 | 3.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 39.0 | 38.0 | 38.0 | 38.0 | 38.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 26.0 | 25.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 60 | 60 | 60 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 20 | 30 | 30 | 30 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6 | 8 | 12 | 10 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 200 | 200 | 250 | 230 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 5 | 5 | 6 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரத்தில் 24 மற்றும் 26 முதல்28 தேதிகளில் இலேசான மற்றும் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 38.0°C - 39°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°C-26°C வேறுபாட்டிலும் இருக்கும். பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 07-11 கிலோமீட்டர் வேகதில் இருக்கும் என எதிர்பார்க்லாம்.

## பொது ஆலோசனை:

வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்கப்படுவதால் உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கவும்.

## குறுஞ்செய்தி :

குறுவை நாற்றங்கால் தயாரிப்பதற்கு இது உகந்த நேரம் ஆகும் எனவே போதுமான தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் நாற்றங்கால் தயாரித்து விதைப்பு செய்யவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பருத்தி | பருத்தியில் மாவுப்பூச்சி தாக்கப்பட்டால், இலையின் அடிப்புறத்தில் மெழுகு போன்று காணப்படும். இதனால் கரிப்பூசணவளர்ச்சியும் காணப்படும். தாக்கப்பட்டசெடிகள் வாடி, கருப்பு நிறமாக மாறும். இதனை கட்டுப்படுத்த எக்டருக்கு பின்வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம். வேப்பெண்ணெய் 2% (20மிலி/லிட்டர்) அல்லது மீன் எண்ணெய் மற்றும் காதி சோப் 25 கிராம் / லிட்டர் அல்லது ப்ரோபெனோபாஸ் 800ml/ ஏக்கர் என்ற அளவில் தெளிக்கலாம். |
| உளுந்து | உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோயினை பரப்பும் வெள்ளை ஈயினை கட்டுப்படுத்த 5% வேப்ப விதை சாறு அல்லது தயாமெதாக்சம் 25 WG – 50g/ஏக்கர் என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தேளிக்கவும். மஞ்சள் ஒட்டும் பொறிகள் ஏக்கருக்கு 10 எண்ணம் என்ற அளவில் வைத்துத் வெள்ளை ஈயின் நடமாட்டத்தை கண்காணிக்கவும். |
| நெல் | மழை எதிர்பார்க்கப்படுவதால் சமீபத்தில் நெல் விதைத்த நாற்றங்காலிலும், நடவு வயலிலும் மழை வரும் சமயங்களில் சிறிதளவு தண்ணீர் தேக்குவதன் மூலம் விதைத்த நெல் மற்றும் நடவு செய்த நாற்றுகள் இடம் மாறுவது தடுக்கப்படும். பெய்துள்ள மழையை பயன்படுத்தி நெல் நடவு செய்யும் விரும்பும் விவசாயிகள் தக்கை பூண்டு கொழிஞ்சி, சணப்பை போன்ற பசுந்தாள் உரங்களை விதைத்து 45 நாட்கள் கழித்து அந்த இடத்திலே உழுவதன் மூலம் மண்ணின் அங்கத்தன்மையை அதிகப்படுத்தலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | ஆட்டுக்கு குட்டிகளில் வளர்ச்சிச் மற்றும் உற்பத்தியை அதிகரிக்க தாதுப்பு கட்டிட்களை கொட்டகைகளில் கட்டிவைக்கலாம். விவசாயிகள் ஆடுகளுக்கு குடல் புழு மற்றும் ஒட்டுண்ணி நீக்கம் செய்யலாம். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பறவையின் | அதிகபட்சவெப்பநிலை நிலவ வாய்ப்புள்ளதால் கோழி மற்றும் மாட்டுப் பண்ணையில் வெப்பஅயற்சியை குறைக்க கூடாரத்தின் ஓரங்களில் நனைந்த சாக்கு தொங்களிடாலாம் அல்லது கூடாரத்தின் மேற்கூரைகளில் தண்ணீர் தெளிக்கலாம். அதிக வெப்பம் மற்றும் குறைவான ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு அடிக்கடி தேவையான அளவு சுத்தமான தண்ணீரை கொடுக்க வேண்டும். |